## பிரதமர் பெயரில் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கெல்லாம்

# ஒன்றிய அரசை விட மாநில அரசுதான் அதிக நிதி அளிக்கிறது!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, ஜூன் 16 -

**பிரதமர் பெயரில் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கெல்லாம் ஒன்றிய அரசைவிட மாநில அரசுதான் அதிக நிதி அளிக்கிறது என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைத் தளப்பதிவிட்டுள்ளார்.**

முதல்வர் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

பிரதமர் வீடு வழங்கும் திட்டம் (PMAY), பிரதமர் மீன்வளத் திட்டம் (PMMSY), உயிர்நீர் (Jaljeevan) எனப் பிரதமரின் பெயரையும் ஸ்டிக்கரில் பிரதமரின் முகத்தையும் தாங்கிச்செயல்படுத்தப்படும்திட்டங்களுட்கெல்லாம் அவர்களைக் காட்டிலும்


State's share higher than that of Union govt.'s in funding for at least six Central schemes

அதிகமாகப் படியளப்பது மாநில அரசுதான்!

படையப்பா படக் 'காமெடி' போல "மாப்பிள்ளை அவர்தான், ஆனால் அவர் போட்டிருக்கும் சட்டை என்னுடையது" எனச் சேலம் அரசு விழாவில் பேசியிருந்தேன். பேசினேன் என்பதைவிட பேசவேண்டிய நிலைக்கு உள்துறை அமைச்சரின் அடிப்படையற்ற குற்றச்சா ட்டால் தள்ளப்பட்டேன் என்றுதான் கூறவேண்டும்.


அது 'தி இந்து' நாளிதழில் செய்தியாகி, தரவுகளோடு விவரிக்கப்பட்டுள்ளது. இனியாவது, கண்ணாடி வீட்டில் இருந்துகொண்டு கல்லெறியும் பழக்கத்தை ஒன்றிய பா.ஜ.க. அரசு மாற்றிக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் குறிப்பிட்டு ள்ளார்.

## இசுரேலின் வன்முறைப் பாதை!

# உலக நாடுகள் கட்டுப்படுத்த வேண்டும்!

## வலைதளப் பதிவில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!



சென்னை, ஜூன் 16–

கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைத்தளப் பதிவு வருமாறு:

**ஈரான் மீது இசுரேல் தொடுத்து வரும் தாக்குதல்கள் பெரும் போரை மூளச் செய்யும் பொறுப்பற்ற செயலாகும். ஏற்கெனவே காசாவில் தொடர்ந்து குண்டுகளை வீசி பாலஸ்தீன மக்கள் அல்லலுற்று வரும் வேளையில் இசுரேலின் இந்த வன்முறைப் பாதை கண்டிக்கத்தக்கது.**

**உலக நாடுகள் அனைத்தும் இதனைக் கட்டுப்படுத்தவும், நீதிக்கும், பொருள் பொதிந்த பேச்சுவார்த்தைக்கும் வலியுறுத்த வேண்டும். இனி வேண்டாம் போர்கள்!"**

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

# பல்லடம் அரசு மருத்துவமனையில் ரூ.3.30 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டிட கட்டுமான பணி அமைச்சர் மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்தார்!

திருப்பூர், ஜூன்.16–

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ. சாமிநாதன், மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் தலைமையில் திருப்பூர் மாவட்டம், பல்லடம் பகுதியில் அமைந்துள்ள கோழியின நோய் ஆய்வகம் மற்றும் தீவன, நீர் பகுப்பாய் வகத்தை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து பின்னர் பல்லடம் அரசு மருத்துவமனை வளாகத்தில் ரூ.3.30 கோடி மதிப்பீட்டில் தரைத் தளத்தில் 331.00 ச.மீ பரப்பளவில் வரவேற்பறை, பணி மருத்துவர், எக்ஸ்ரே, சி.டி.ஸ்கேன் அறை, அவசர சிகிச்சை பிரிவு, குழந்தைகள் மருத்துவ பிரிவு, கழிவறை மற்றும் மின்தூக்கி வசதிகளுடனும், முதல் தளத்தில் 331.00 ச.மீ பரப்பளவில் தீவிர சிகிச்சைப் பிரிவு (ஐ.சி.யூ), ஆய்வகம், அறுவை அரங்கு, மயக்க மீளறை, கழிவறைகள் மற்றும் மின்தூக்கி வசதிகளுடன் விபத்து மற்றும் எலும்பு முறிவு சிறப்பு சிகிச்சை பிரிவு கட்டடம் கட்டும் பணியினை துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் பல்லடம் நகர கழக செயலாளர் நா.ராஜேந்திரகுமார், கழக விவசாய தொழிலாளர் அணி துணை செயலாளர் ச.ராஜசேகரன், மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் கீர்த்தி சுப்ரமணியம், பல்லடம் நகர்மன்ற தலைவர் கவிதாமணி ராஜேந்திரகுமார், இணை இயக்குநர் (மருத்தவ நலப்பணிகள்) மரு.மீரா, செயற்பொறியாளர் (பொதுப்பணித்துறை) முத்து சரவணன், உதவி செயற்பொறியாளர் செந்தில் கமலக்கரண், உதவி இயக்குநர் (கால்நடை பராமரிப்புத் துறை) மரு.பரிமலர்ராஜ்குமார், பல்லடம் அரசு மருத்துவமனை தலைமை மருத்துவர் மரு.ராமசாமி உள்பட மாவட்ட, நகர கழக நிர்வாகிகள், வார்டு கழக செயலாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், துறை சாரந்த அலுவலர்கள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## சேலத்தில் நடைபெற்ற அரசு விழாவில் முதல்வரால் திறந்து வைக்கப்பட்ட

# அதிநவீன 7 இலட்சம் லிட்டர் தானியங்கி பால் பதப்படுத்தும் தொழிற்சாலை!

## அமைச்சர் இரா.இராஜேந்திரன் பார்வையிட்டார்!

சேலம், ஜூன்.16–

**முதலமைச்சர் அவர்களால் கடந்த 12.06.2025 அன்று சேலத்தில் நடைபெற்ற அரசு விழாவில் சேலம் ஆவினில் திறந்து வைக்கப்பட்ட அதிநவீன 7 இலட்சம் லிட்டர் தானியங்கி பால் பதப்படுத்தும் தொழிற்சாலை மற்றும் புதிதாக பயிற்சியாளர்கள் தங்கும் விடுதி வளாக கட்டடம் ஆகியவற்றை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.இரா.பிருந்தாதேவி முன்னிலையில் 14.06.2025 அன்று நேரில் பார்வையிட்டார்.**

இந்நிகழ்விற்குப்பின், சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளதாவது:-

முதலமைச்சர் அவர்கள் 12.06.2025 அன்று சேலம், அரசு மோகன் குமார மங்கலம் மருத்துவக்கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற விழாவில் சேலம் மாவட்டத்தில் பல்வேறு புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, முடிவுற்ற திட்ட பணிகளை தொடங்கி வைத்தார்கள். இவ்விழாவில் சேலம் ஆவினில் ரூ.52.80 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட, அதிநவீன 7 இலட்சம் லிட்டர் தானியங்கி பால் பதப்படுத்தும் தொழிற்சாலை மற்றும் புதிதாக பயிற்சியாளர்கள் தங்கும் விடுதி வளாக கட்டடத்தினையும் திறந்து வைத்தார்கள்.

சேலம் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் நாளொன்றிற்கு சுமார் 6.35 லட்சம் லிட்டர் பாலை 784 தொடக்க கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள் மூலமாக 48,000 பால் உற்பத்தியாளர்களிடமிருந்து கொள்முதல் செய்து பால் மற்றும் பால் உப பொருட்களை நுகர்வோருக்கு வழங்கி வருகிறது.

தற்பொழுது சேலம் ஒன்றியத்தில் அதிகரித்து வரும் பால் கொள்முதல், பால் மற்றும் பால் உப பொருட்கள் விற்பனையை கருத்தில் கொண்டு நுகர்வோர்களுக்கு தங்கு தடையின்றி பால் மற்றும் பால் பொருட்களை தொடர்ந்து வழங்கிட ஏதுவாக தமிழ்நாட்டிலேயே 7 லட்சம் லிட்டர் பால் அதிக கொள்திறன் கொண்ட மேற்பார்வை கட்டுப்பாடு மற்றும் தரவு கையகப்படுத்தும் அதிநவின தொழில்நுட்பத்துடன் சேலம் ஒன்றிய வளாகத்தில் புதிதாக ரூ.51.62 கோடி திட்ட மதிப்பில் கட்டப்பட்டு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 12.06.2025 அன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

தானியங்கி முறையில் செயல்முறை இயந்திரங்களை துல்லியமாக இயக்குவதன் மூலம், பால் திட இழப்புகள் குறைந்தபட்சமாக இருக்கும். மேலும், பால் உற்பத்தியாளர்களிடம் கிடைக்கும் அனைத்து உபரி பாலையும் கொள்முதல் செய்ய இயலும். இதன் மூலம் பால் உற்பத்தியாளர்களுக்கு லாபகரமான விலையை உறுதி செய்யமுடியும். மேலும், அடுத்த 5 ஆண்டுகளில் கொள்முதல் 8.16 இலட்சம் லிட்டராகவும், பால் விற்பனை 3.6 இலட்சம் லிட்டராகவும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், ஏற்றுமதி தரநிலைகளை பூர்த்தி செய்யும் வகையில் பால் பொருட்களை மிக உயர்ந்த தரத்தில் உற்பத்தி செய்து பால் மற்றும் பால் பொருட்களின் தரத்தை மேம்படுத்த ஏதுவாக இத்தொழிற்சாலை அமைந்துள்ளது.

இதனைத் தொடர்ந்து, சேலம் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றிய பயிற்சி நிலையத்தில் ஒவ்வொரு வருடமும் பயிற்சி கால அட்டவணை தயார் செய்து செயற்கை முறை கருவூட்டல் மற்றும் முதலுதவி பயிற்சி, தூய பால் உற்பத்தி பயிற்சி, பால் பண்ணை தொழில்நுட்பம், இயந்திரவியல், தரக் கட்டுப்பாட்டு பணியாளர் பயிற்சி, பிரதமசங்க பணியாளர்களுக்கு தொகுப்பு பால் குளிர்விப்பான் கையாளுதல் பயிற்சி, பால் பரிசோதனை கருவிகள் பயிற்சிகள் சேலம் மற்றும் இணை ஒன்றிய பால் உற்பத்தியாளர்கள், அலுவலர்களுக்கு பயிற்சிகள் நடத்தப்பட்டு வருகிறது.

இப்பயிற்சிகளில் கலந்துகொள்ளும் பயிற்சியாளர்களுக்கு தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை திட்டத்தின் கீழ் அனைத்து வசதியுடன் கூடிய புதிதாக பயிற்ச்சியாளர்கள் தங்கும் விடுதி கட்டடம் ரூ.1.18 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு முதலமைச்சர் அவர்களால் 12.06.2025 அன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. சேலம் ஆவினில் முதலமைச்சர் அவர்களால் ரூ.52.80 கோடி மதிப்பில் திறந்து வைக்கப்பட்டுள்ள கட்டடங்களின் செயல்பாடுகள் குறித்து இன்றைய தினம் நேரில் பார்வையிடப்பட்டது.

இவ்வாறு சுற்றுலாத்து றை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்தார்.

இந்த நிகழ்வின் போது, மாவட்ட வருவாய் அலுவலர் / ஆவின் பொது மேலாளர் ப. குமரேஸ்வ ரன் மற்றும் தொடர்புடைய அலுவலர்கள், பணியாளர்கள் உடனிருந்தனர்.




தஞ்சாவூர் மாவட்டம்



ரூ.1,194 கோடியில்
புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டுதல்
முடிவுற்ற திட்டப் பணிகளைத் திறந்து வைத்தல்
மற்றும்
அரசு நலத்திட்ட உதவிகள்
வழங்கும் விழா

தலைமை
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

தஞ்சாவூர் மாவட்டத்தில்
கடந்த 4 ஆண்டுகளில்
திராவிட மாடல் அரசின் சாதனைகள்...

ரூ.16,453 கோடியில்
61,00,315 பயனாளிகளுக்கு
நலத்திட்ட உதவிகள்

ரூ.2,269 கோடியில்
52,661 வளர்ச்சித் திட்டப் பணிகள்

மொத்தம்
ரூ.18,722 கோடி மதிப்பிலான
நலத்திட்ட உதவிகள்
மற்றும் வளர்ச்சித் திட்டப் பணிகள்


ஒருங்கிணைந்த புற்றுநோய் சிகிச்சை மையம், தஞ்சாவூர்


ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி, குருங்குளம் கிழக்கு, தஞ்சாவூர்


நாட்டு மீன் இன விதை உற்பத்தி மையம், அகரம்பேட்டை, தஞ்சாவூர்

நாள் :
16.6.2025, திங்கட்கிழமை

நேரம் :
காலை 11.00 மணி

இடம் :
மன்னர் சரபோஜி அரசு கல்லூரி, தஞ்சாவூர்

செ.ம.தொ.இ./617/வரைகலை/2025

எல்லார்க்கும் எல்லாம்!

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in

வெளியீடு : இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை – 600 009.